

சிவோஹம் பாராயணத் தொகுப்பு
சிவார்ப்பண மஞ்சரி - 004

தினசரி ப்ரதோஷ பாராயனம்
ஸ்ரீ நந்திகேஸ்வரர் பாடல்கள்

அடியார்கள் அனைவரும் நந்திகேஸ்வரர் அருள்பெற அர்ப்பணிப்பு
சிவோஹம் சிவார்ப்பணம் தொகுதி - 2025 /01/27 தை சோமவாரம்

01 ஸ்ரீ நந்திகேச்வரர் துதி:

பண்: திரிகோணப்பாலை ஹம்சத்வனி தாளம் : ஆதி

ஸ்ரீ நந்திதேவர் துதி

நந்தியெம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிபட்டால்
புந்தியில் ஞானம்சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழஉண்டு!
அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாடஉண்டு!
முற்பிறவி வினைகள் யாவும்தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வைபட நலங்கள்உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர்அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம்தொழு வோமே!

நந்தீஸ்வரர் பெருமை:

நந்திஎம் பெருமான் தன்னை நாடொறும்
வணங்குவோர்க்கும் புத்தியில் ஞானம் சேரும்
பொலிவுலு செல்வம் கூடும் சிந்தையில் அமைதி
தோன்றும் ! சிலுப்புறு மக்கள் சேர்வர் இந்திர போகம்
கிட்டும் ! இணையிலா வாழ்வு தானே .

ஆதியிலும் திருநந்தி அனாதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலா திருநந்தி திகழ்பெருமை திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதவே

02 நலம் தரும் தந்தி

கந்தனின் தந்தை யைத்தான்
கவனமாய் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்கு தற்கு
நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதி யாகி
அகிலத்தை காக்க வந்தாய்
நந்தியே உனைத் துதித்தேன்
நாடிவந் தெம்மைக் காப்பாய்

ஒன்பது கோள்களுக் கும்
உயரிய பலன் கொடுப்பாய்
பொன்பொருள் குவிய வைப்பாய்
புகழையும் வளர்த்து வைப்பாய்
சிந்தனை வளம் கொடுப்பாய்
சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத் துதித்தேன்
நாடிவந் தெம்மைக் காப்பாய்

மாலைகள் ஏற்க வைப்பாய்
மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்க வைப்பாய்
விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையின் வண்ணப் பூவை
சூடிடும் நந்தி தேவா
நாளும்நான் உனை துதித்தேன்
நாடிவந் தெம்மைக் காப்பாய்.

தஞ்சையில் பெரிய நந்தி
தளிருடல் வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி
அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை
குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாய் உனையடைந் தேன்
தயங்காது எமைக் காப்பாய்.

03 நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கையிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி 01

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி 02

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி 03

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி 04

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினைஎந்நாளும் அகற்றும் நந்தி 05

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிட விளையும் நந்தி 06

வேந்தன் நகர் செய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி 07

கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி 08

04 நாட்டமுள்ள நந்தி

நந்தியிது நந்தியிது நாட்டமுள்ள நந்தியிது
நந்தனுக்கு நலம்புரிந்த நலமான நந்தியிது
செந்தூரப் பொட்டுவைத்து சிலிர்த்துவரும் நந்தியிது
சிந்தையில் நினைப்பவர்க்குச் செல்வம்தரும் நந்தியிது (நந்தி) *01*

தில்லையில் நடனமாடும் திவ்யநாதன் நந்தியிது
எல்லையில்லா இன்பம்தரும் எம்பெருமான் நந்தியிது
ஒற்றை மாடோட்டியெனும் உலகநாதன் நந்தியிது
வெற்றிமேல் வெற்றிதரும் வேந்தன்நகர் நந்தியிது (நந்தி)*02*

பச்சைக்கிளி பார்வதியாள் பவனிவரும் நந்தியிது
பார்ப்பவர்க்குப் பலன்கொடுக்கும் பட்சமுள்ள நந்தியிது
சங்கம் முழங்குவரும் சங்கரனின் நந்தியிது
எங்கும் புகழ்மணக்கும் எழிலான நந்தியிது (நந்தி) *03*

கொற்றவன் வளர்த்துவந்த கொடும்பாளூர் நந்தியிது
நற்றவர் பாக்கியத்தால் நமக்குவந்த நந்தியிது
நெய்யிலே குளித்துவரும் நேர்மையுள்ள நந்தியிது
ஈஎறும்பு அணுகாமல் இறைவன்வரும் நந்தியிது (நந்தி) *04*

வானவரும் தானவரும் வணங்குகின்ற நந்தியிது
காணவரும் அடியவர்க்கும் கருணைகாட்டும் நந்தியிது
உலகத்தார் போற்றுகின்ற உத்தமனின் நந்தியிது
நகரத்தை வளர்த்துவரும் நான்மறையின் நந்தியிது (நந்தி) *05*

05 திருமுறையில் நந்தி வழிபாடு

01.திருஞானசம்பந்தர்:

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மைப்
பூண்டு நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகிப்
பங்கயந் துளவம் நாளும் வேந்திரப் படைபொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி

ப்ரதோஷ வழிபாடு

நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கும் மத்தாக
பாகந்தேவ ரொடசுரர் படுகடலின் யெமக்கடைய
வேகநஞ்செழவாங்கே வெருவொடு மிரீந் தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்த மாக்குவித்தான் மறைகாடே.

02. திருநாவுக்கரசர்

பருவரை ஒன்று சுற்றி அரவங்கைவிட்ட
இமையோரி ரிந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்து விசை போய்ப்
பெருகிட மற்றிதற்கெர் பதிகார மொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே

03.சுந்தரர்:

கோல் வரை மத்தென நாட்டிக்
　　கோரணவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்ச கண்டவர் மித விரிய
　　அமரர்கட் கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
　　கண்டத்தே வைத்தே பித்த நீ செய்த
சிலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
　　செழும் பொழில் திருப்புன் கூருளானே

04.மாணிக்கவாசகர்:

கோலால மாகிக் குரைகடல் வாயன்றெழுந்த
ஆலால முண்டானவன் சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிவனேல் அயன் மாலுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவகான் சாழலோ.

05.காரைக்கால் அம்மையார்

இனியோ நாமுய்ந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே இனியேன்
வினைக் கடலை யாக்குவிக்கு மிளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்.

06. திருமூலர்:

நந்தி அருளாலே நாதனாம் பேறுபெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவது என்செய்யும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான் இருந்தேனே.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏந்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே

திருநந்தி தேவர் வணக்கம்

(புராணங்களிலிருந்து)

01. கந்த புராணம்

ஐயிரு புராணநூல் அமலற்கு ஓதியும்
செய்யபன் மறைகளும் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாதன் ஈட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்

02.திருவிளையாடற்புராணம்

வந்திறை அடியில் தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்த வேந்திரப் படையால் தாக்கி
அந்திம் பகலும் தொண்டர் அலகிடும் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாதநகை மலர்முடிமேல் வைப்போம்.

03. திருவாரூர்ப் புராணம்

இருள்கெழு மணிமிடற் றிளநி லாமுடி
ஒருவனே கடவுளென் றுலகந் தேறுவான்
விரிதரு முதுமறை வியாத மாமுனி
கரமலர் கொய்ததோர் கடவுள் போற்றுவாம்.

04. சிதம்பர புராணம்

புரிசடையெம் பரனருளால் சடைமுடியும்
    நுதல்விழியும் புயங்க ணான்குஞ்
சுரிகைபிரம் புழைமழுவும் படைத்துரிய
    கணாதிபர்க டொ ழுது போற்ற
வரியபர மானந்த சிவஞான
    போதமெனு மருநூ றன்னைத்
தெரியவிரித் தருணந்தி தேவனருள்
    நினைந்து வினை தீர்து மன்றே

05. சேது புராணம்

போதனுறை மலர்முகிழா தமரர் கோமான்
    புரநிலைமை குலையாது மருது போழ்ந்த
பாதனுறை கடல்சுருங்கா தரிணஞ்சூ ரல்படை
    மழுவாண் சுரிகைகரம் பரித்துப் பாந்தட்
காதனுறை சிதறுபுனல் கங்கைசூடும் கண்ணுத
    லெம்பரன் மதியும் கதியும் நல்கு
நாதனுறை திருக்கயிலை காவல் பூண்ட
    நந்தியைநம் புந்தியின்க ணயந்து வாழ்த்துவோம்.

06. மச்ச புராணம்

விரிந்தகொடு முடிதாங்கி விண்ணுலகு
    மெண்டிசையும் விளக்க வெண்மை
புரிந்துயர்ந்த திண்கயிலைப் பொருப்பிடத்திற்
    பச்சைமயில் பொருந்தும் பாகம்
பரிந்துசெழுங் கதிர்பரப்பும் பவளநிறக்
    கருமிடற்றெம் பரமன் வேலை
தெரிந்தமரர்க்கு அருள்புரியும் நந்தீசர்
    பாதமலர் சென்னி சேர்ப்பாம்.

07. திருக்கூவப் புராணம்

பாக்கு லங்கள் பழிச்சுமை நெஞ்சமும்
வாக்கு மங்கை வடிவு நிகர்த்தொளி
தேக்கும் வெள்ளிச் சிலம்புடன் எம்மையும்
காக்கும் நந்தி கழல்தொழுது ஏத்துவாம்.

08.நல்லூர்ப் புராணம்

அந்திவான் பிறைமுடி அண்ணல் வந்தனை
முந்திவான் உறைதரு முகுந்தன் நான்முகன்
இந்திரா தியர்கள் வந்திறைஞ்சும் எம்பிரான்
நந்திவா னவன்பதம் நளின ஏத்துவாம்.

09 சீகாளத்திப் புராணம்

செம்பொருள் ஆகமத் திறந் தெரித்தரு
நம்பவ மறுத்தநன் நந்தி வானவன்
உம்பாத மணிமுடி உரிஞ்சக் கன்றிய
வம்பவிழ் மலரடி மனத்தி ருத்துவாம்

10. தேவாங்க புராணம்

படருமிருட் கொடும் பிறவிப் பாவவனம்
தனைச்சிதைத்துப் பந்த பாசத்
தொடரதனை அறுத்துவினைத் தறிமுரித்து
மனப்பாகைச் சுளித்து ஞானத்
திடமருவி நெடுங்கயிலைத் தடங்கிரிவாழ்
பரஞ்சுடரின் றிருமுன் னோங்கு
மடல்குலவு நந்தியெனும் கடவிகட
களிற்றிணை தாட்கன்பு செய்வாம்.

11. திருக்கழுக்குன்றப் புராணம்

கண்ணனையும் கமலமலர்க் கண்ணனையும்
அமரரையும் ககன வாசி
விண்ணனையும் உமைபாகன் வையகத்தே
நிரந்தரமும் விலக்குந் தோறும்
தண்ணனைய துழாய்மணமும் தாமரையின்
விரைமணமும் தாருத் தாரின்
வண்ணனையின் மணமுமணந் துடையபிரம்
புடையானை வணக்கம் செய்வாம்

12. திருக்காளத்திப் புராணம்

அந்தி வெண்பிறை சூடும் அவிர்சடை
முந்து மான்மழு மூன்றுக ணான்குதோள்
எந்தை போல்வெள்ளி வெற்பினி னினிதமர்
நந்தி சேவடி நாண்மலர்ப் போற்றுவாம்.

13 .காஞ்சிப் புராணம்

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லா முதற்குரு நாத னாகிப்
பங்கயந் துளவ நாறும் வேத்திரப் படைபொ றுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி

14. விநாயக புராணம்

வெள்ளி மால்வரை விமலனார் விளம்பிய வேதந்
தெள்ளு மாகம புராணங்கள் செழுங்கலை பிறவு
முள்ள வாறுதேர்ந் துலகெலாம் வழங்கமுன் னுரைத்த
வள்ள லாகிய நந்தியங் குரவனை மதிப்பாம் .

15. திருத்தணிகைப் புராணம்

கள்ளகந் தளித்த மலர்த்தலைச் சேக்குங்
கடவுள் நாரணன் முதலானோர்
உள்ளகந் தழும்ப மலர்ப்பதம் அமைத்திட்டு
உடலெலாம் தழும்ப வேத்திரத்தின்
வள்ளலங் கமலத் தனிக்கரம் அமைத்த
வரதனைக் கற்றைவெண் கதிர்கால்
வெள்ளியங் கயிலை காவல் பூண்டருளும்
வீரனை வார்கழல் பணிவாம் .

16. பேரூர்ப் புராணம்

உலகம் யாவையும் ஒருநொடிப் பொழுதின் உண்டு சக்கர மாதி
மலர்கை யேந்திய நாரணன் முதலிய வான வர்குழாம் எல்லா
மலகி லார்வமு மச்சமுந் தழீஇ நிரையாக நின்றனர் போற்ற
விலகு வேத்திரச் சிறியகோற் பணிபுரி யேந்தல் பூங்கழல்போற்றி

17. திருவானைக்காப் புராணம்

எங்குநிறைந்த பேரறிவென்றி இயம்பு பொருளுமான் மாவுந்
தங்குமலமும் பகுத்துணர்ந்த தனதுள்ள கம்போற்றொ முதுபுகுந்த
துங்கமுனிவர் முதலோரைச் சுடர்கைப் பிரம்பால் வேறுவே
றங்கணிறு விப்பணி புரியுமண்ணல் மலர்த்தாள் எண்ணுவாம்

18. பூவாளூர்ப் புராணம்

தத்தமக் கிறைவர் ஆய்ந்து தகச்செயும் முறையும் தென்பால்
உத்தமன் முறையும் உம்பரா தியோர்க் குறாது நீங்கக்
கைத்தலப் பிரம்பி னோச்சிக் கண்ணுதல் சேவை யார்க்கும்
பத்தியின் அருளு நந்தி பனிமலர்ப் பாதம் போற்றி .

19. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

திருமருமால் அயன்முதலோர் மணிப்பிரம்பின்
வழிபுரியத் தேவ தேவன்
கருணைவிழி கடைக்கணித்த பணிகள் புரிந்து
அத்துவிதக் கலப்பான் மும்மைப்
பொருள் வினவிப் பெறுஞான போதத்தைச்
சனத்குமரர் போற்ற நல்கும்
குருமணியைத் திருநந்தி நாயகனைப்
பரம்பரையில் குறித்து வாழ்வாம் .

20. கடம்பவனப் புராணம்

வாங்கரு மாதவ வடிவாஞ் சிலாதமுனி
மகவாகி வளர்ந்தெட் டாண்டில்
பாங்குறு மாதவம் புரிந்து பரனுரு
நித்தியத் துவமும்பண் பாற்பெற்றேய்
ஓங்கயில் வண்சுரிகை பிரம்புழை மழுநம்
ஈசனுவந் துதவச் செங்கை
தாங்கி நெடுந்தடங் கயிலை காத்தருணந்
தீசர்பதம் தலைமேற் கொள்வாம் .

21. சிவராத்திரிப் புராணம்

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற்
றனிவிழியுந் திண்டோ ணான்குங்
கையதனிற் சுரிகைமழுப் பிரம்புகவை
யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி
வையமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை
மலைகாக்க மதியஞ் சூடு

மையனருள் பெற்ற நந்தி அடிக்கமலம்

முடிக்கமல மாக வைப்பாம் .

22. புலியூர்ப் புராணம்

ஒருநந்தி தனிலிவர்ந்தே ஒருநந்தி

தலைச்சூடி உலக மெல்லாம்

தருநந்தி உமையுடனே சார்ந்த பெருங்

கயிலைதனில் காவல் பூண்டே

கருநந்தி யிடவருள்வான் கரநான்கும்

கண்மூன்றும் கலந்த ஞானத்

திருநந்தித் தலைவனுயர் சிவாகமங்க

டேர்ந்தானைச் சிந்தை செய்வாம் .

23. சீர்காழிப் புராணம்

ஆதி யிடையீ றில்லான் அருளேகண்

ணாகநின்றோன் அமலன் பாத

மீதி லிறைஞ்சிட நணுகும் வாசவனான்

முகனெடியோன் மிடைந்த போது

போதிர் விலகுதி ரெனலாற் றருமலரம்

புயந்துளவம் பொதிந்த தெய்வத்

தீதின் மணம்படைத்த மணிப்பிரம் புடையதிரு

நந்தி திருத்தாள் போற்றி

24. கணேச புராணம்

மணியொளிர்பொற் பூண்பிரம் போடுழை

மழுவா ளுறைச்சுரிகை வயங்குகையும்

மணிநிறவல் விடக்களமு நுதல்விழியும்

மதிபுனை செஞ்சடையும் வாய்ப்ப

மணிபெறநீ றணிந்தபர சிவனெனநற்
சிலாதரற்கு மருவு கண்ணின்
மணியெனவெண் கயிலையிடத்து அமர்ந்தநந்தி
தேவனடி வணக்கம் செய்வாம் .

25.திருவாப்பனூர்ப் புராணம்

கரியமணி கண்டனைச்செங் கண்ணுதல்வான்
அவனை முனிக் கணஞ்சூழ் வெள்ளித்
திருவரையிற் றனிமுதலைப் பசியநறுங்
கொடியினொடும் தரிசித் தேத்தும்
அரியயனிந் திரனமரர் தமையுமடி
யானொத்த னடிக்கு ளாக்கும்
குருமணிவேத் திரத்தடக்கை நந்திதிரு
வடிமுடிமேல் கொண்டு வாழ்வாம் .

26. திருப்பூவணப் புராணம்

திகழ்மகுட சேகரமும் சிறுபிறையும்.
நுதற்கண்ணுஞ் செங்கை நான்கு
மகிழ்சுரிகைப் பிரம்பினுடன் மான் மழுவும்
படைத்தந்தி வண்ண நண்ணி
இகபரநல் கெம்பெருமா னிணையடிவீழ்ந்து
அயன் முதலோ ரெந்த ஞான்றும்
புகழ்கயிலை மலைக்காவல் பூண்டதிரு
நந்திபதம் புந்தி கொள்வாம் .

27. திருமயிலைப் புராணம்

வடகயிலைத் திருவாயில் காவலனைச்

சிலாதரன்றன் மகவைத் துத்திப்

படவரவை அரைக்கசைத்த பரமனைச்

செஞ்சடையின் மதிபதித்த கோவைத்

தடவரைக்கைச் சிலையெம்மான் றிருமுன்னர்

நெருங்குமலர்த் தவிசோ னாதிக்

கடவுளர்மேற் படும்பிரம்பொன்று உடைய

திருநந்தி தனைக்கருத்துள் வைப்பாம் .

28. ஆதிபுரிப் புராணம்

நான்முகனும் நெடியோனும் திகழ்வாயில்

காத்துநிற்க நகைவாய் விண்டு

தேன்வழியும் செம்பதும மலர்ந்ததெனத்

தழைந்திலகு செங்கை நான்கின்

மான்மழுவுஞ் சுடர்வாளு மணிப்பிரம்பும்

தாங்கி வெள்ளிவரை மேல்வாழும்

மேன்மைபெறு திருநந்தி நாதன்

மலர்த்தாள் சிரசின்மேற் கொள்வோமே .

29. அவிநாசிப் புராணம்

சந்திகண வாகுதிசேர் புக்கொளிநா யகர்சிவந்த சரணப் போதில்

புந்திதண வாவிருத்திப் பொற்புயங்க ணான்கிலங்கப் புடைசேர்

றந்திகண வோதையின்மத் தளமதிர்த்து மறுகாவஞ் சலிகொண்

நந்திகண நாதனடி நாளுமற வாதபடி நயந்து சேர்வாம் .

30. திருமுருகன் பூண்டிப் புராணம்

மலர்க்கருங் குழன்மலை மகணாய
கன்மன்றின் முன்றினின் மேவும்
சொலற்கரும் புகழரிய யனிந்திரன்
சுரர்கண் மாதவ ரேனோர்
இலக்கமின் றியகணத் தினர்யா
ரையுமிரு மருங்கினுஞ் சேர
விலக்கும்வேத் திரத்திருப் படைக்கரத்
தினான்விரை மலர்ப்பதம் போற்றி

31 .பவானிகூடற் புராணம்

பணியும் திங்களும் பகையறப் புனைசிவ
பரஞ்சுடர்த் திருமுன்றில்
அணியும் நெஞ்சராய்த் தாழ்ந்திடும் வானவர்
தடநெடு முடிமோலி
மணியும் கற்பகமா லையுஞ்சிந் திடவந்து
தாக்கிடு செங்கை
அணியும் வேத்திரப் படையுள் நந்தியெம்
அடிகள்சே வடிபோற்றி .

32. கருவூர்ப் புராணம்

அந்தி வான்பிறையும் மானு மடன்மழுப் படையு மேந்தித்
தந்தி வீழுரிவை போர்த்த தனிமுத லுருவந் தாங்கித்
புந்தி மாலகல ஞான போதக வெயில்வி ரிக்கு
நந்தி வானிரவி நாடி நமதிரு ணலிவு செய்வாம் .

33. மருதூர்ப் புராணம்

அண்டபிண்ட பூதபேதஞ் சுமக்கும்
 பிரகிருதி யகண்ட பாரங்
கொண்டவெலா மணுவொன்றிற் கூட்டிவைத்த
 வணுவனந்த கோடி முற்றும்
பண்டையருட் சாத்திவசத் தேற்றியந்தச்
 சத்திதன்னிற் பாதி யாக்கித்
தண்டலின்றித் தாங்குமவன் றன்னைத்
 தாங்குநந்தி திருச்சரணம் போற்றி .

34. திருக்குற்றாலப் புராணம்

நேத்திரங்க ளொருமூன்றும் புயநான்கும்
 விழிமணியு நிறைநூன் மார்பும்
சாத்துபுலித் தோலுடையும் வெண்ணீறும்
 விரிசடையும் சடைமேற் பாம்பும்
காத்திரள்கைம் மான்மழுவுங் கண்ணுதலா
 மெனத்தோற்றிக் களங்கார் மாற்றி
வேத்திரத்தின் படைதரித்த விடைமுகத்தெம்
 பெருமானை வேண்டல் செய்வாம் .

35. திருநெல்வேலிப் புராணம்

புதுமல ரிதழியார் புனையும் வேணியான்
கதிதரு திருமலைக் கயிலை காவல்
அதியணி பவனரு ணந்தி நாயகன்
மதுமல ரடியிணை வணங்கி வாழ்த்துவாம் .

36. மருதவனப் புராணம்

முழுதுலகு நிறைபிரமம் பரம னேயென
மறைகண் மொழியுந் தன்மை
வழுதியென்பான் முதுகி லடிபடு பொழுதில்
கண்டிருந்து மயங்கு வோர்க்குக்
குழுவுறுமால் விரிஞ்சன் முதல்வா னவர்மேற்
கைப்பிரம்பு கொண்டு தாக்கிச்
செழுமணித்தண் கயிலையின்பாற் றெளிவிக்கும்
அவன்மலர்த்தாள் சிரத்தில் கொள்வாம் .

37. திருநல்லூர்ப்பெருமணப் புராணம்

கங்கை வேணியன் கயிலையில் கதிர்மணிக் கோயிற்
றுங்க வாயிலி னின்று வானவர் முடித்தொகைமேல்
அங்கை வேத்திரந் தாக்கி நீணெருக் குணாதகற்றும்
எங்கள் நாயகன் பதமலர் இறைஞ்சுவாம் என்றும் .

38. மயூராசலப் புராணம்

புந்தி யானினைப் பதரிதாந் திருக்கயிலா
யத்திறைவன் புனலார் வேணி
அந்தி வான்மதி யணியுமண் ணன்மலர்
அடிபணிவா னண்ணுந் தேவர்
பந்தி மாமகுட நிரைவில் கிடவேத்
திரமென்னும் படைகொண் டோச்சு
நந்தி தேவர் பணிந்து நந்தமது
வினை தொலைத்து நந்தா துய்வாம்

39. திருப்பெருந்துறைப் புராணம்

முத்தியை அடைவோர் ஞான முந்துற வடைதல் போலச்
சத்தியை யொருபால் வைத்த பிரான்றனை யடைவோர்
முந்திப் பத்தியை யியற்றித் தன்னை யடைதரப் பண்பார்
யோக சித்தியை அடைந்த நந்தி தேவனை வணக்கம் செய்வாம்

40. காசி ரகசியம்

மறைமுழுதும் வகுத்துணர்ந்த வாதரா
யணமுனி வன்மதி மாழாந்து
நிறையகில நாதனெதிர் நாரணனே
பிரமமென நிகழ்த்த லோடு
மறைதருமவ் வகிலேசன் முன்பு
நாட்டிய சயத்தூண வனேயாக
முறை நிறுவி யருள் கொழிக்கு நந்திபிரான்
அடிக்கமல முடிக்கொள் வாமே .

41. திருநாகைக்காரோணப் புராணம்

பதிமரபிற் பரவிரண்டாஞ் சிவனென
யாவரும் புகலப்பட்டு மெங்க
டுதிவிரவு குருமரபின் முதற்குரவ
னென்றெடுத்துத் தூற்றப் பட்டோ
னுதியமைவச் சிரங்கதைசு தரிசனமுற்
படைநோன்மை நொறுங்க வாய்ப்பெய்
ததிவிரைவி னெழுதூறற் படைப்பெருமான்
அடிக்கமல மடுத்து வாழ்வாம்

42.திருக்குடந்தைப் புராணம்

புரவனைக் கொருபா னல்கு புராணன்பா லனைத்துந் தேர்ந்து
குரவனைச் சிவனே யென்று பாவனை செயச்சொல் கூற்றும்
பரவனைத் துயர்க்கு மாக்கிப் பதிவருக் கத்து மேய
உரவனைக் கயிலை காக்கும் ஒருவனைப் பணிதல் செய்வாம்.

43. மாயூரப் புராணம்

வண்ணம் பொலியு மேருமால் வரையை மேவுநசை யினர்சீர்
விண்ணம் பொலியு மிளாவிருத மேவலென மான்மறி யினொடு
தண்ணம் பொலியுங் கைப்பரமற் சாரும் விருப்ப ரறிவுடையோ
ரெண்ணம் பொலியுந் தனைச்சார இருக்கும்ஒருவன் பதம்பணிவாம்

44. உறையூர்ப் புராணம்.

முடிகெழு கூடன்மாறன் முழுப்பரஞ் சிவனேயென்றோர்
அடிகொடு தெரித்தபின்னும் மயங்குவார்க்கறி விப்பான்போல்
வடிவுடை மாயனாதி வானவர்களைப் பிரம்பான்
நெடியவெண் கயிலைவெற்பில் புடைக்குநின் மலன்றாள்போற்றி

45. திருவம்பர்ப் புராணம்

சிகர மேவிய கைலாயஞ் சிறப்புறக் காத்த லோடு
மகர மேவிய நீர்வைப்பும் வானமும் மதித்து நாளும்
பகர மேவிய பேராளன் பரசி வனவனப் பேர்மே
லகர மேவிய பேருங்கொள் அண்ணலை எண்ணு வாமே

46. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

வெள்ளியங் கயிலை காவல் விண்ணவர் குழாம் விலக்க
றெள்ளிய வுபதே சித்தல் சிறந்தவிம் மூன்று மாற்ற
வொள்ளிய சுரிகை சூர லொருபெருங் குரவுத் தன்மை
நள்ளிய நந்திப் புத்தே ணாண்மலர்ப் பாதம் போற்றி .

47. விளத்தொட்டிப் புராணம்

முந்தி வானவ ரேத்து முதல்வரை
அந்தின் மேய வபர சிவனெனு
நந்தி நாயக னாண்மலர்ப் பாதமுட்
சிந்தி யாவினை சிந்தியுய் வாமரோ .

48. கோயிலூர்ப் புராணம்.

தம்மை வந்தடைந்த நல்லோர் தம்மை நன்குணர்ந்த வத்தை
மும்மையுங் கடந்து தாமே முழுதும் தம்மை வாய்ப்பச்
செம்மைநன் னெறிசால் வேத சிரப்பொருட் சேவைநல்கு
எம்மையா ளுடையநந்தி தேவரை இறைஞ்சல்செய்

49. திருக்குறுக்கைப் புராணம்

பஞ்சா வரணத் தடைநீங்கிப் பங்கேருகனா தியர்புறத்தே
பஞ்சா ரடியா ளொருபாகன் பாதங்கலக்க விடல்போல்வெப்
பஞ்சாம் வகைநிற் பவரகத்தே பஞ்சபாசத் தடையொழிந்தின்
பஞ்சா ரொளியிற் கலக்கவிடும் பரமனந்தி பதம்பணிவாம் .

50. தனியூர்ப் புராணம்

என்வ ணக்கம் ஏற்கும் இறையவன்
தன்வ ணக்கம் உளங்கொடு சார்பவர்
முன்வ ணக்கம் செயப்பொலி முன்னவன்
பொன்வ ணக்கம் செய்புண்ணிய பாதமே .

51. சூதசங்கிதை

மின்னிடித் திடுமா மோலி விரிஞ்சன்மான் முதல்விண் ணோருக்
கன்னடித் திடுகண் டத்தோனங் கயிலையிற் றனின்பந்
துன்னடி அருளும் முன்னர்ச் சுஃறொலிச்சூர லோச்சித்
தன்னடி அருளும் வள்ள ராமரை யடியுள் வைப்பாம் .

52. திருத்தினைநகர்ப் புராணம்

அண்டமெலாம் கோதை எனப்பூண் டுமதை
அழித்து மறித்தழகு வாய்ப்பப்
பண்டைநிலை மையிற்பு ரிந்து மாட்டயருங்
கணங்கடொழும் பதியாய் மானுங்
திண்டிறல் வெம்மழுச் சுரிகை பிரம்புணி
கரநான்கும் செறிமுக் கண்ணும்
கொண்டிலகு மபர சிவமெனும் நந்தி
தேவனருள் குறித்து வாழ்வாம் .

53. திரிசூலகிரிப் புராணம்

இந்திரன் மால யனாதி யாவரும்
வந்து துன்னிய சிவசபையின் மாறுகொண்டு
உய்ந்தன மெனவவ ரொதுங்க வோச்சிய
நந்தி எந்நாளுமென் உள்ளத்து நண்ணுமே .

54. புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

பொடியணியும் மேனியுமுப் புரிநூல்சூழ்
மணிமார்பும் புனையு மின்னல்
கொடிதிகழும் செஞ்சடையும் விழிமூன்றும்
கரநான்கும் குலவு மானும்
வடிமழுவும் சுடர்வாளும் மணிப்பிரம்பும்
விளங்க வெள்ளிவரை காத்தையன்
முடிவரிய திருவாய்மை செலுத்துநந்தி
நாயகன்றாண் முடிமேற் கொள்வாம் .

55. திருநாவலூர்ப் புராணம்

அந்தி வண்ண னாலயமுன் வாயிலில்
தந்திரன் கரத லங்கொள் வேத்திரன்
நந்தி எம்பிரான் நளின மென்பதம்
சிந்தை செய்குவார் தீமை தீர்குவார் .

56.கடம்பவன புராணம்

இரணநல்குர விரும்பவ மிரும்பசி யுரோகம்
அரணுளும் பயங்கிலேசங் கேதமவ மிருத்து
மரண வேதனை யிலையெலா மகற்றென வணங்கி
புரண நாதனைப் பிரதோஷத்தில் போற்றிடத்தகுமால்

இதிகாசங்கள்

57. சிவரகசியம்

சிலையுடைச் சிலைஎம் பிரான்றிகழ்க் கயிலைக்கண்
நிலைமை பெற்றிடுங் கணங்களின் முதன்மையு நிகரில்
புலமை பெற்றிடும் சைவதேசிகர்க் கெலாம் பொருவில்
அலைமையும் பெற்ற நந்திதா டலைமிசைக் கொள்வாம்.


58. நிஷ்டானுபூதி

முந்துசஞ் சிதங்க டீர மும்மலக் கங்குல் பாற
வந்தியும் பகலும் இல்லா ஆதித்தந் அகத்தில் தோன்ற
விந்தியம் புலன்கண் மாய இன்ப வாரிதியின் மூழ்க
நந்தியெம் பெருமான் பாத நளினமெஞ் சிரமேல் வைப்பாம் .

இடபதேவர் வணக்கம்

58. அவிநாசிப் புராணம்

முற்சிலம்பு விடுமதனை முளரியங்கண்
ணாலெரித்த முதல்வர் வேதச்
சொற்சிலம்பு புக்கொளியார் கோதைபா
கத்துடனே தோற்றஞ் செய்யும்
விற்சிலம்பு நிகர்மேனி விடைஇடபத்
தனித்தேவர் மிளிர்மாணிக்கப்
பொற்சிலம்பு கிண்கிணிசேர் புனைவுதரு
கனைகழல்கள் போற்றல் செய்வாம்.



திருச்சிற்றம்பலம்